Job Access
Driving disability employment

# தகவல் ஏடு
# உடலியலாமை உள்ளவர்களை வேலையில் அமர்த்துதல்

உடலியலாமை உள்ள ஒருவரை வேலையில் அமர்த்துவதால் உங்களுக்குக் கிடைக்கும் வர்த்தகப் பலன்கள் உள்ளன – காலியாக உள்ள பணியிடம் ஒன்று நிரப்பப்படுவது மட்டுமல்லாமல் அதற்கு அப்பாற்பட்ட பலன்களும் உள்ளன. இந்த ஆதாயங்களுக்கு அவுஸ்திரேலிய மற்றும் சர்வதேச ஆய்வுகள் ஆதாரச் சான்றுகளாக உள்ளன. உடலியலாமை உள்ள பணியாட்களானவர்கள்:

- நம்பகமானவர்கள் - உடலியாமை உள்ளவர்கள் குறைவான விடுப்புகளையே எடுப்பார்கள், குறைவான நோய்க்கால விடுப்பையே எடுப்பார்கள், மேலும் மற்ற பணியாட்களைக் காட்டிலும் இவர்கள் வேலையைத் தக்க வைத்துக்கொள்வது அதிகம்.
- அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்கள் - தகுந்த வேலை ஒன்றில் அமர்த்தப்பட்டதும், உடலியாமை உள்ளவர்கள் மற்ற பணியாட்களுக்குச் சமமாகப் பணியாற்றுவார்கள்.
- கட்டுபடி ஆவார்கள்: இவர்களைத் தெரிவு செய்ய ஆகும் செலவு, இவர்களுக்கு ஆகும் காப்பீட்டுச் செலவு மற்றும் நட்டஈட்டுச் செலவு ஆகியன அதி குறைவு. மற்ற பணியாட்களோடு ஒப்பிடப்பட்டுப் பார்க்கும் போது, உடலியாமை உள்ளவர்களால் நேரிடும் நட்டஈட்டு நிகழ்வுகள் மற்றும் பணியிட விபத்துகள் ஆகியன குறைவு.
- வர்த்தகத்திற்கு நல்லது - உடலியாமை உள்ளவர்கள் வாடிக்கையாளர்களோடு வலுவான தொடர்புறவுகளை உருவாக்கிக் கொள்வார்கள், மற்றும் பரந்துபட்ட தொழிலாளர் படை ஒன்றை உருவாக்க உதவுவதன் மூலம் பணியாளர்களது மனவுறுதி மற்றும் விசுவாசத்திற்கு ஊக்கமளிப்பார்கள். குறைவான வருகைகள், குறைவான ஆளெடுப்பு மற்றும் மறுபயிற்சிச் செலவுகள் ஆகியவற்றின் காரணமாக உங்களுக்கு உண்மையான சேமிப்புகள் உள்ளன. உடலியாமை உள்ளவர்களைப் பணியில் அமர்த்துவதானது நிறுவனத்தின் ஒட்டுமொத்தப் பன்முகத்தன்மைக்குப் பங்களிப்பு செய்கிறது. வேலை கொடுப்பவரது வர்த்தகச் சின்னத்திற்கு நேர்முகமான ஆதாயங்களைக் கொடுத்து, வர்த்தகத்தின் ஊழியர்கள், அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தினரிடையே நிறுவனத்தின் பெயரை இது உயர்த்துகிறது. உடலியாமை உள்ளவர்களை ஆதரிக்கும் நிறுவனமாக நீங்கள் இருப்பது உங்களுடைய வர்த்தகத்தை முன்னெடுத்து வைப்பதற்கான நல்லதொரு வழியாகும்.

**தகவல் வெளிப்படுத்துகை நிர்வாகம்**
தமது உடலியாமையைப் பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதா இல்லையா என்பதை உங்களுடைய பணியாளர் தெரிவு செய்யலாம். அவர்களுடைய உடலியலாமையின் காரணமாக வேலை செய்வதற்கான அவர்களது திறன் பாதிக்கபட்டாலொழிய உடலியலாமையை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இல்லை.

ஒருவரது உடலியலாமையைப் பற்றிய தகவல்கள் பெரும்பாலும் அவரது உணர்வார்ந்த அந்தரங்கமான விடயங்களோடு சம்பந்தப்பட்டிருக்கும். தமது உடலியலாமையைப் பற்றிப் பணியாளர் ஒருவர் உங்களுக்குத் தெரிவித்தால், வேலை சம்பந்தப்பட்ட அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பயிற்சியளிப்பதற்கான அல்லது வேலை சம்பந்தப்பட்ட மாற்றியமைப்புகளைச் செய்வதற்கான சாத்தியக்கூறை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

**பணியிட வளைந்துகொடுக்கும் தன்மை**
பணியிட ஏற்பாடுகளைச் செய்வதில் வளைந்துகொடுக்கும் தனமையோடு இருப்பது, உடலியாமை உள்ளவர்கள் உட்பட, பணியாட்களை ஈர்த்து அவர்களைத் தக்க வைத்துக்கொள்ள உங்களது நிறுவனத்திற்கு உதவக்கூடும். பணியட மாற்றங்களைச் செய்ய வேண்டிய அல்லது உடலியாமை உள்ள பணியாளர் ஒருவருக்காக விசேட உபகரணங்களை வாங்க வேண்டிய தேவை உங்களுக்கு இருந்தால் உங்களுக்கு ஆகும் செலவுகளை 'பணியிட ஒத்தாசை நிதி' (Employment Assistance Fund (EAF)) எனும் திட்டத்தினால் ஈடு செய்ய இயலக்கூடும்.

EAF மற்றும் உடலியலாமை உள்ளோருக்கான வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பற்றிய மேலதிகத் தகவல்களை நீங்கள் 'ஜாப்அக்ஸெஸ்' அமைப்பினரது www.jobaccess.gov.au எனும் வலைத்தளத்தில் காணலாம், அல்லது 'ஜாப்அக்ஸெஸ்' அறிவுரைஞர் ஒருவரை 1800 464 800 எனும் இலக்கத்தில் நீங்கள் அழைக்கலாம் - கைப்பேசியில் இருந்து செய்யப்படும் அழைப்புகளுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.